# காட் மற்றும் பிறெட்டாவின் வருகை
# (Visiting Katt and Fredda)


## இன்கேபோர்ஜ் வொன் ஷடோவ்
## (Ingeborg von Zadow)

Tamil Translation by Dr. Saminadan Wimal, Sri Lanka


**பாத்திரங்கள்**

**காட்**

**பிறெட்டா**

**மிறென்டா**

(இது மூன்று நடிகைகளைக்கொண்ட ஒரு நாடகம்).

ஓர் அறை. இரு மஞ்சங்கள், இரு கதிரைகள், ஒரு மேசை, ஒரு கதவு, காட் மற்றும் பிறெட்டா.

**பிறெட்டா:** இந்த இடம் நல்ல சோக்கான இடம்.

**காட்:** ஆமாம்.

**பிறெட்டா:** அமைதியானதுந் தான்.

**காட்:** ஆமாம்.

**பிறெட்டா:** நிம்மதியானது.

**காட்:** ஆமாம்.

**பிறெட்டா:** இடைஞ்சல் இல்லாதது.

**காட்:** ஆமாம்.

**பிறெட்டா:** நாங்கள் இரண்டு பேர் மட்டும்.

*ஓர் இடைவெளி.*

**காட்:** இது இந்த மாதிரியே இருக்கும் என்று நினைக்கிறீங்களா?

**பிறெட்டா:** ஆமாம்.

**காட்:** நாங்கள் இரண்டு பேர் மட்டும்.

**பிறெட்டா:** ஆமாம்.

**காட்:** எப்பவும் நாங்கள் இரண்டு பேர் மட்டும்?

**பிறெட்டா:** ஏனில்லை?

*ஓர் இடைவெளி.*

**காட்:** யாராவது வரக்கூடும்.

**பிறெட்டா:** சீ.., வர மாட்டினம். வராட்டில் நல்லம்.

**காட்:** ஏன் உங்களுக்கு விருந்தாளிகள் பிடிக்காதா?

**பிறெட்டா:** எல்லாம் குழம்பிப்போகும்.

© VERLAG DER AUTOREN GmbH & Co.KG, Taunusstraße 19,
60329 Frankfurt a.M., Germany, Tel. +49 (0)69 23857420
www.verlagderautoren.de, theater@verlagderautoren.de

காட்: ஏன் குழம்பிப்போகும்?

பிறெட்டா: விருந்தாளி எங்க தங்கலாம்? இரண்டு பேருக்கு தானே ரூம். மூன்று பேருக்கு இல்லையே. இரண்டு மஞ்சங்கள். ஒன்று எனக்கு, மற்றது உங்களுக்கு.

காட்: மூன்று பேருக்கு ரூம்ல இடம் இருக்கு. நாங்கள் கொஞ்சங் கிட்ட கிட்ட
அமைத்துக்கொள்ள வேண்டும்.

பிறெட்டா: என்னை நம்புங்கள் காட், இது தான் நல்லது காட்.

காட்: உங்களுக்குப் பயம், உங்களுக்கு விருப்பமான இந்த ஒழுங்கு குழம்பிப்போகும் என்று.
அப்பிடித் தானே?

பிறெட்டா: எனக்கு விருப்பமான ஒழுங்கா?

காட்: ஆமாம், உங்களுக்கு விருப்பமான ஒழுங்கு.

பிறெட்டா: உங்களுடைய பொருட்களும் ஒழுங்காக இருந்தால் நல்லந் தானே. உங்களுடைய பொருட்கள் என்ன?,அவை எங்கே இருக்கிறது என்று தெரிந்துகொண்டிருப்பது நல்லந் தானே.

© VERLAG DER AUTOREN GmbH & Co.KG, Taunusstraße 19,
60329 Frankfurt a.M., Germany, Tel. +49 (0)69 23857420
www.verlagderautoren.de, theater@verlagderautoren.de